50 வருட பாரம்பரியமிக்க

பெஸ்டன் பம்ப்ஸ்

கொங்கு மண்டலத்தின் சிறந்த பெண் தொழிலதிபரான முனைவர் ஸ்ரீபிரியா கௌரிசங்கர் அவர்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பெஸ்டன் பம்ப்ஸ் நிறுவனம் தனது 51 வது பொன் விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது .

இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற தமிழகத்தின் அடையாளம்

கோவை பெஸ்ட் குழும நிறுவனங்களில் பெண்களைப் போற்றும் விதமாக இங்கு பணிபுரியும் ஊழியர்களில் 40 சதவீதம் பெண்கள் பணியாற்றி வருகின்றனர்.பெஸ்ட் குழும நிறுவனர் திரு.ஜெ.கௌரிசங்கர்– வித்யா கௌரிசங்கர் தம்பதியினரின் மூத்தமகள் ஸ்ரீ பிரியா கௌரிசங்கர் இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவராக உள்ளார். மற்ற சகோதரிகள் சுமதி, அபிராமி, மகாலட்சுமி ஆகியோர் இந்த நிறுவனத்தில் இயக்குனர்களாக உள்ளனர். பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து அவர்களை வாழ்க்கையில் உயர்வு பெறச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் பெஸ்ட் குழும தலைவர் டாக்டர் ஸ்ரீபிரியா கௌரிசங்கர் பெண் தொழிலாளர்களின் திறமையையும் அவர்களது தொழில் திறனையும் ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் இங்கு பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு உலக மகளிர் தினம் கொண்டாடப்படும் நாளில் விருதுகளையும் பரிசுகளையும் வழங்கி வருகிறார்.

தெய்வத்திருவாளர்கள்

வித்யா கௌரிசங்கர் - J.கௌரிசங்கர்

51 வது ஆண்டில் பெஸ்டன் பம்ப்ஸ்

தொழில் நகரமான கோவையில் பம்ப் உற்பத்தி துறையில் சிறந்த அடையாளமாக திகழ்கிறது பெஸ்டன் பம்ப் ஸ். பம்ப் உற்பத்தியில் தனக்கென தனி இடத்தை பிடித்துள்ள பெஸ்டன்பம்ப்ஸ் கோவை தடாகம் ரோட்டில் உள்ள வேலாண்டி பாளையத்தில் தயாராகிறது. பொறியியல் துறையில் பல வருட அனுபவங்களை கொண்ட பம்ப்செட் துறையின் பிதாமகர் கௌரிசங்கர் அவர்களால் உருவாக்கப்பட்டது பெஸ்ட் பம்ப்ஸ் நிறுவனம். இந்த நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது பெஸ்டன் பம்ப் உருவான விதம் குறித்தும் அதன் சிறப்புகள் குறித்தும் பெஸ்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் பெஸ்ட் குரூப் ஆப் கம்பெனிகளின் தலைவர் ஸ்ரீபிரியா கௌரி சங்கர் கூறியதாவது :

எனது தந்தை ஜே. கௌரிசங்கர் அவர்கள் 1964இல் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் டிப்ளமோ படிப்பில் மாநிலத்திலேயே முதலிடம் பிடித்தவர் 1970இல் தாத்தாவிடம் பெற்ற 100 ரூபாய் முதலீட்டை கொண்டு பம்ப் ரிப்பேர் மற்றும் ரீவைண்டிங்செய்யும்சிறிய அளவிலான தொழிலை ஆரம்பித்தார். 1975இல் கோவை அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் பகுதிநேர மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் பல்கலைகழகத்தில் எனது தந்தை முதலிடம் பிடித்தார். இதையடுத்து மெக்கானிக்கல் இன்ஜினியரிங் முதுநிலை படிப்பிலும் சென்னை பல்கலைகழகத்தில் முதலிடம் பிடித்தார். இன்ஜினியரிங்கில் அதிக ஆர்வம் இருந்ததால் எனது தந்தை ஜே. கௌரிசங்கர் அவர்கள் எப்பொழுதும் ஏதாவது ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுகொண்டே இருப்பார் 1977-ஆம் ஆண்டு அவர் வடிவமைத்த ஜெட் பம்புக்கு மகாராஷ்டிரா அரசின் டெண்டரில் மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்தது. அதுவே பெஸ்ட் இன்ஜினியர்ஸ் நிறுவனம் பற்றி உலகம் அறிந்துகொள்ள வழியாகவும் அமைந்தது. பம்புகளை பொறுத்த வரை மார்க்கெட்டில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன என்பதைத் தேடித் தேடி தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவராக எனது தந்தையார் விளங்கினார்.

குடும்பமாக வெளியூருக்குச் சென்றால் கூட எங்களுடன் நேரத்தை செலவழிக்காமல் அந்த ஊரில் அந்தந்த நாட்டில் கிடைக்கும் பம்புகள் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமாக இருப்பார். அவரது தயாரிப்புகளில் தரத்துக்கு எப்போதும் முக்கியத்துவம் அளிப்பவர். புதிதாக ஒரு டிசைன் அவர் மனதில் வந்து விட்டால் போதும். அந்த வடிவமைப்பு முடிவடையும் வரை எவ்வளவு நேரமானாலும் தொழிற் சாலையில் அமர்ந்து வேலை செய்யக்கூடியவர். இரவு நேரத்தில் ஏதாவது ஐடியா தோன்றினால் உடனே எழுந்து வந்து அதை செய்து பார்த்து விடக் கூடிய அளவிற்குத் திறமை பெற்றவர். ஆண்டு தொடக்கத்திலேயே ஆராய்ச்சிக்கு என ஒரு பங்கு நிதியை ஒதுக்கி விட்டு மற்ற செலவுகளை செய்வதே அவரின் வழக்கம்.

அப்பாவின் இந்த ஆர்வத்தாலேயே இன்று சொந்தமாக 7 காப்புரிமைகளை எங்களது நிறுவனம் வைத்துள்ளது. எனது தந்தையின் 40 வருட கடின உழைப்பின் மூலம் அவர் தொட்ட உயரங்கள் ஏராளம். அவர் மறைவிற்குப் பின் நிர்வாக பொறுப்புகளை ஏற்று கவனித்து வருகிறேன்.ஜே. கௌரிசங்கர் அவர்கள் எனது தந்தை என்பதைவிட எனக்கு தொழிலை கற்றுக் கொடுத்த மிகச் சிறந்த ஆசான் என்று கூறினால் மிகை அல்ல. நான் படித்தது கம்ப்யூட்டர் சயின்ஸ் இன்சினியரிங் என்றாலும் பம்ப் தயாரிப்பில் நிபுணத்துவம் பெறும் அளவுக்கு என்னை உருவாக்கியவர் அவரே. வேலை நேரத்தில் மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொள்வார். அவர் தயாரிக்கும் பொருள் உலக தரத்தில் இருக்க வேண்டுமென உணவு உறக்கத்தை எல்லாம் உதறிவிட்டு வேலை பார்க்கக் கூடியவர் எனது தந்தை.அவர் சொல்லிக்கொடுத்த முக்கியமான பாடங்கள் ''செய்வதைத் திருந்தச் செய், அதையும் இப்போதேசெய்; அறிவுதான் அனைத்துக்கும் மூலம்; கடினமான நேரத்தில் உன்னுடைய முழு ஆற்றலையும் வெளிப்படுத்து, வரும் முடிவை பாடமாக எடுத்துக் கொள்;'' என்று எனக்கு அடிக்கடி கூறுவார். அப்பாவின் மறைவுக்குப் பின் அவரது கனவை நிறைவேற்றும் வகையில் பெஸ்டன் பம்ப் ஸை மிகச் சிறந்த நிறுவனமாக உருவாக்க அயராது உழைத்து வருகிறோம். அவரது காலத்தில் வருடத்திற்கு 1 லட்சம் பம்புகள் விற்பனை ஆயின இன்று ஆண்டுக்கு 3 லட்சம் பம்புகள் விற்பனை எனும் புதிய உச்சத்தை தொட்டு பயணித்துக் கொண்டிருக்கின்றோம் தற்போது எங்களது நிறுவனத்தில் பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்து வருகின்றனர். தொழிலாளி முதலாளி பாகுபாடு இல்லாத எங்கள் நிறுவனத்தின் கடவுளாக வணங்கப்படும் என் தந்தை கௌரி சங்கர் மற்றும் தாயார் மறைந்து விட்ட போதும் எங்களுக்கு உறுதுணையாக இருந்து எங்களை செயல்பட வைப்பது குடும்பம் போன்ற எங்களின் ஊழியர்கள் தான். எங்கள் இலக்கு அனைவருக்கும் தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைக்க வேண்டும். சூரிய சக்தி ஆற்றலால் இயங்கும் பசுமை நிறுவனமாக மாற்ற வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறோம். இதற்காக பத்து வருடங்களுக்கு முன்பே முக்கிய இயக்கங்களுக்கு சூரிய சக்தி மின்சாரத்தை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டோம். பெஸ்டன் பம்ப் ஸ்ன் தனிச்சிறப்பு அதன் தரம் தான். முக்கியமாக பெஸ்டன் வாட்டர் ஜெட் பம்ப்களுக்கு சந்தையில் மிக சிறந்த வரவேற்பு இருக்கிறது. 2002 ஆம் ஆண்டு 75 ஹெர்ட்ஸ் ல் வேலை செய்யக்கூடிய பம்பை அறிமுகப்படுத்திய பெருமை எங்களுக்கு உண்டு. இதேபோல் போர் ரெஜிவனேசன் தொழில்நுட்பத்தில் இயங்கும் பம்பை அறிமுகம் செய்துள்ளோம் இதற்கு வாழ்நாள் அதிகம்.

நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் பலவற்றை கோவை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் நடத்தி வருகிறோம். விளையாட்டில் சிறந்து விளங்கும் கோவையைச் சேர்ந்த கிராமத்து மாணவர்களுக்கு எங்களின் பெஸ்ட் ஸ்போர்ட்ஸ் அகடமி மூலமும் நான் தலைவராகவும் இருக்கும் கோவை அத்லெடிக் கிளப் மூலமாகவும் ஆதரவு அளித்து வருகிறோம். மேலும் அரசு பள்ளிகளுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கட்டுமானத்திற்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம். 1970 இல் ஆரம்பித்த இந்த பயணம் தற்போது 50வது ஆண்டை கடந்து வெற்றி நடை போட்டு வருகிறது. இதை தொடர்ந்து எங்கள் நிறுவனம் சார்பில் பல உன்னதமான புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்த உள்ளோம். இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் ''பெஸ்டன் பம்ப்'' நிறுவனத்தை மிகச் சிறந்த நிறுவனமாக வளர்ப்பதே எங்களின் நோக்கமாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

1988 "UDYOG VIBHUSHAN AWARD"

Received by our Chairman & Managing Director

Shri. J.GOWRI SANKAR B.E., M.Sc., (Engg)

from her Excellency

Dr.SHANKAR DAYAL SHARMA - Vice President of India

on 12th June 1989 at Mavalankar Auditorium, Rafi Marg, New Delhi.

கோவையில் 1970 ஆம் ஆண்டு சிறிய ரீவைண்டிங் ஷாப்பாக தொடங்கப்பட்ட பெஸ்ட் குரூப்ஸ் கிளைகளை இந்தியா வெங்கும் பரப்பியுள்ளது. பம்ப் உலகின் குருவாக விளங்கிய ஆன்மீக செம்மல் திரு.J.கௌரிசங்கர் அவர்களால் ரூ.100 முதலீட்டில் துவக்கப்பட்ட பெஸ்ட் நிறுவனங்கள் தற்போது டாக்டர் ஸ்ரீபிரியா கௌரிசங்கர் அவர்களின் சீரிய தலைமையில் மேன் மேலும் வளர்ந்து வருகிறது. பல லட்சம் வாடிக்கையாளர்களை கொண்ட பெஸ்ட் பம்ப்ஸ் நிறுவனம் இந்திய பம்ப்செட் துறையில் முதன்மையான நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது. கோவை தடாகம் ரோட்டில் பெஸ்ட் நிறுவனத்தால் இதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் சிறு மற்றும் குறுதொழில்களினால் பயன் பெற்று வருகின்றனர். நேரடியாகவும், சார்பு தொழில்களாலும் பெஸ்ட் நிறுவனம் மூலம் இப்பகுதி வளம் நிறைந்ததாக மாறி உள்ளது. ஜானகிராமன் – சுப்புலெட்சுமி தம்பதியினரின் 2 வது மகனாக திரு.J.கௌரிசங்கர் 1944ல் பிறந்தார். 80 ரூபாய் பென்சன் வாங்கி இவரது தந்தையார் தனது குடும்பத்தை நடத்தி வந்தார். 1964–ல் திரு. J.கௌரிசங்கர் டிப்ளமோ இன் மெக்கானிகல் என்ஜினீயரிங் படிப்பை PSG-யில் படித்தார். மாநிலத்தில் முதல் மாணவராக தேர்வு பெற்றார். 1970–ல் ரூபாய் 100 முதலீட்டில் சிறிய நிறுவனத்தை தொடங்கினார்.

1971–ல் GCT-யில் B.E, 1974–ல் பல்கலைகழக முதல் மாணவராக தேர்ச்சி அடைந்தார். 1975–ல் M.Sc(Engineering)-ல் சென்னை பல்கலைகழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். கோவை, சங்கனூர் கனரா வங்கி இவரது திறமையையும், உழைப்பையும் பார்த்து கடன் வழங்கி உதவியது. அதன் மூலம் 7 லட்ச ரூபாயில் உற்பத்தி செய்து கொண்டிருந்த நிறுவனம் இன்று பல கோடி ரூபாய்க்கு வர்த்தகத்தை எட்டி உள்ளது.

சமுதாய பணிகள்

தந்தையை போல ஆன்மீக பணியிலும், சமுதாய பணியிலும், அவர் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செய்து வருகிறார். சமுதாய நலனை தன் நலனாக கொண்டு நீர் மேலாண்மை திட்டத்தில் சூற்றுச்சூழலை மேம்படுத்த கோவை சுற்று வட்டாரத்தில் சுமார் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் வறண்ட போர்வெல்களில் மழைநீர் சேகரிப்பு மூலம் நிலத்தடி நீர் உயர்த்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

விளையாட்டுத்துறையில் கிராமப்புற மாணவர்களும், அரசுப்பள்ளி மாணவர்களும்

பயன்பெறும் வகையில் தற்போது அவர் தலைவராக பதவி வகித்து வரும் **கோவை அத்லெட்டிக் கிளப்** மூலமாக சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருகிறார்.

திரு.J.கௌரிசங்கர்–வித்யா கௌரிசங்கர் தம்பதியினருக்கு 4 மகள்கள். 1.ஸ்ரீபிரியா, 2.சுமதி, 3.அபிராமி, 4.மகாலட்சுமி. 2011–ல் திரு. J.கௌரிசங்கர் மறைவுக்கு பிறகு தற்போது பெஸ்ட் குழும நிறுவனங்களை மூத்த மகள் ஸ்ரீபிரியா கௌரிசங்கர் நிர்வகித்து வருகிறார். இவர் தனது தந்தையார் J.கௌரிசங்கரிடம் தொழிற் பயின்றார். இவர் கோவை C.I.T கல்லூரியில் B.E பட்டம் பெற்றார். பெஸ்ட் நிறுவனங்களில் இவர் தனது ஆரம்ப காலங்களில் மோட்டார் வடிவமைப்பு வல்லுனராக பணியாற்றினார். இதனால் இப்போதும் பெஸ்ட் நிறுவனங்களில் தயாரிக்கப்படும் மோட்டார்கள் அனைத்தும் குறைந்த மின் சக்தியை பயன்படுத்தும்படி வடிவமைக்கப்படுகின்றன. மின் சேமிப்பே இவரது முக்கிய நோக்கமாகும். சூரிய ஆற்றல் மற்றும் காற்றாலை மின்சாரம் பெஸ்ட் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. Besten என்பது இந்த நிறுவனங்களின் பிராண்ட்டாக விளங்குகிறது.

J.கௌரிசங்கர் பேரூர் பட்டீசுவரர் கோவில் அறங்காவலர் குழுத்தலைவராக இருந்தார். மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 1992-ல் இவரது தலைமையில் குடமுழுக்கு நடைபெற்றது. பல்வேறு கோவில்களுக்கு தொடர் திருப்பணிகள் செய்து வந்தார். அவரது திருப்பணிகள் இன்றும் பல கோவில்களுக்கு தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

பம்ப் வகைகள்

1.போர்வெல்நீர்மூழ்கிபம்ப்,2.மோனோபிளாக் பம்புகள், 3.ஜெட் பம்புகள், 4.ஷேலோவெல் செட் பம்புகள், 5.ஓப்பன்வெல் பம்புகள், 6.மல்டி ஸ்டேஜ் ஜெட் பம்புகள், 7.ஸ்பெசல் டைப் பம்புகள், 8. சோலார் பம்புகள், 9. செல்ப் பிரைமிங் பம்ப்

தரச்சான்றுகள்

ISO- 9001: 2015
ISO- 14001: 2015
ISO- 45001: 2018
(NABL Accredited Calibration Lab)

உலகத்தரம் வாய்ந்த பரிசோதனை கூடம் மூலம் பல்வேறு கருவிகள் தரக்கட்டுப்பாடு செய்யப்படுகிறது.

ஆன்மீக செம்மல் J.கௌரிசங்கர் மற்றும் முனைவர் ஸ்ரீ பிரியா கௌரிசங்கர் பெற்ற விருதுகள்:-

1.குடியரசு தலைவரால் தேசிய தர விருது– 1987
2.உத்யோக் பத்ரா விருது– 1987
3.தங்க பதக்கம்– 1987
4.பாரதீய ஜோதி உத்யோக்– 1992
5.தர மேம்பாட்டு விருது– 1992
6.ராஜீவ் காந்தி தேசிய ஒற்றுமை விருது– 1995
7.(பிரஸ்டீசியஸ்) பிராண்ட் விருது– 2018
8.அமெரிக்கா சர்வதேச தமிழ் பல்கலை கழகம் வழங்கிய முனைவர் பட்டம்– 2018

9.அகில இந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு கழகம் சிறந்த பெண் தொழில் முனைவோர் விருது– 2018
10.ராஜ் டிவி வழங்கிய சிறந்த பெண் தொழில் அதிபர்– 2018
11.ரேடியோ சிட்டி வழங்கிய பெண் தொழில் முனைவோர் விருது– 2019
12. தேசிய பாதுகாப்பு குழுமம் சார்பில் ஊக்க விருது– 2020

பெஸ்ட் குழும நிறுவனங்கள்

1. பெஸ்ட் இன்ஜினியர்ஸ்
2. பெஸ்ட் இன்ஜினியர்ஸ் பம்ப்ஸ் (பி) லிட்.,
3. ரோட்டாரோ இன்ஜினியர்ஸ் பி.லிட்.,
4. என்பெஸ்ட் பம்ப்ஸ் (இந்தியா) பி.லிட்.,
5. பெஸ்ட் பம்ப்ஸ் (இந்தியா) பி.லிட்.,

பெஸ்டன் பம்புகள் இந்தியா முழுவதும் டீலர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திறமை வாய்ந்த மெக்கானிக்குகளால் அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மையம் மூலம் பம்புகள் சர்வீஸ் செய்யப்பட்டு வருகின்றது.

TM
QUALITY TRUST BESTEN
Besten
Since 1970
World class Pumps

MORE STARS MORE SAVING ENERGY SAVINGS GUIDE
BEE 5 ★ RATING APPROVED
ISI PRODUCTS
ENERGY IS LIFE BEE CONSERVE IT

பெஸ்ட் இன்ஜினியர்ஸ் பம்ப்ஸ் பி.லிட்,
என்பெஸ்ட் பம்ப்ஸ் (இந்தியா) பி.லிட்.
பெஸ்ட் பம்ப்ஸ் (இந்தியா) பி.லிட்.

6 -B, தடாகம் ரோடு, வேலாண்டிபாளையம், கோவை- 641 025.
செல்: 97900 09973
PH: 0422 – 2437625
Email: info@bestenpumps.com, Website: www.bestenpumps.com- www.bestenpumps.co.in